அழுவதற்கு என்று எவரும் வந்து பூமியில் பிறக்கவில்லை
அழுததுபோதும் அழுதபோதும் வாழ்வு இறக்கவில்லை
எம்வாழ்வில் ஏனோ காயம் இது காலம் செய்த மாயம்
எங்கள் சோக ராகம் மாறும் எங்கள் பாத சுமையும் வீழும்
புது காத்து எம்மை செர்க்குமே நல்ல காலம் வந்து தாங்குமே

ஆளிப்பேரலை வந்து எம்மை அடித்து கொன்றதுவே
அழுகை குரலலை எழுந்து எங்கள் வாழ்வே நொந்ததுவே
இழந்ததை இதயங்கள் அழுதே கேட்கிறதே
அடித்ததை அணைக்காதா ஏக்கங்கள் பார்க்கிறதே
இரவும் பகலும் போல எங்கள் வாழ்வும் மாறுவதேன்
கண்ணீரை துடை மனமே புதுக்காலம் இசை மனமே
வேல்லும் நெஞ்சை உருவாக்கு வெற்றி வாழ்வை அரங்கேற்று

இனி என்ன வாழ்கை என்ற சோக ராகங்கள் வேண்டாமே
இயர்க்கையில் கோபங்கள் கொள்ளும் கெட்ட சாபங்கள் வேண்டாமே
உணர்வுகள் அழுவதால் வசந்தங்கள் விடியாதே
உறவினை இழந்ததால் உறவுகள் முடியாதே
நம்பிக்கை ஒன்றே வாழ்வை வெல்லும் ஆணையம் ஆகிறதே
கண்ணீரை துடை மனமே புதுக்காலம் இசை மனமே
வேல்லும் நெஞ்சை உருவாக்கு வெற்றி வாழ்வை அரங்கேற்று